

கள்ளக்குறிச்சி கச்சேரி சாலையில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பாஜக அரசை கண்டித்து தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்,அருகில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ.,வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஏ.ஜெ.மணிக்கண்ணன்எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.அங்கையற் கண்ணி மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் பங்கேற்றனர்.




விழுப்புரம் தெற்கு மாவட்டம் , வானூர் கிழக்கு ஒன்றியம், வானூர் மேற்கு ஒன்றியம் , கிளியனூர் ஒன்றியம் மற்றும் கோட்டகுப்பம் நகரச் செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஒன்றியச் செயலாளர் பி.கே.டி முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், நகரச் செயலாளர் எஸ்எஸ். ஜெயமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன் பொதுக்குழு உறுப்பினர் ஆர் இளங்கோ, ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி.கே.டி முரளி, ஒன்றிய குழு துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய அரசை கண்டித்து

# அரியலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினர் திரண்டனர்!

*அரியலூர், ஜூலை 29-*

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்,ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த "பாசிச பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" மாவட்ட கழக துணை செயலாளர் சி.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கழக கொள்கை பரப்பு இணைச்செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன் கழக சட்டதிட்ட திருத்தக்ககுழு இணைச்செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் கொள்கைபரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாளை து.அமரமூர்த்தி

மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ. செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோக சக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன்,நகர் மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், அல்போன்ஸ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, சி.ஆர்.எம். பொய்யாமொழி,

வி.எம்.ஷாஜகான்,சுமதி கருணாநிதி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட மீணவரணி அமைப்பாளர் எம்.ஜி.இராஜேந்திரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தர்மதுரை, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.ஆர். இராமதுரை, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் பானுமதி, மீனா, முன்னாள் மகளிரணி மாவட்ட தலைவர் விஜயலட்சுமி, அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ஜெயகுமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி,மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் செ.இளஞ்செழியன், நகர் மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, நகர கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், மாலா தமிழரசன், குணா, மணிவண்ணன், உத்திராபதி, ஞானபிரகாசம், இராஜமாணிக்கம், முரணொலி குமார், கொளஞ்சியப்பா, பா.ரமேஷ், கு.பிரபா கரன், மா.செ.செந்தில் குமார்,விஜி, குமரவேல், சங்கர்,வேற்றிவேலன், குமார், முத்தமிழ்,வேலு, மகளிர் அணி நிர்வாகிகள் மலர்விழி ரஞ்சித்குமார், இலக்கியா, சித்ரா, சுகன்யா, காந்திமதி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டித்து, கழக தலைவர் – தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், உதகை ஏ.டி.சி பகுதியில் கழக துணை பொதுச்செயலாளர் கழக மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராசு தலைமையில், மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக முன்னணியினர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி,ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க அரசைக் கண்டித்து தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட திமுகழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர்கள் தடங்கம் பெ சுப்ரமணி மற்றும் முனைவர் பி.பழனியப்பன் ஆகியோர் தலைமையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி மற்றும் தர்மபுரி நகர கழக செயலாளர் நாட்டான் மாது முன்னிலையில் தருமபுரி BSஅலுவலகம் அருகில் பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.உடன் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன்,முன்னாள் எம்.பி.தாமரைச்செல்வன்,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,மற்றும் 1000க்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழகம் முழுமையாக வஞ்சிக்கப்பட்டுள்ளதை கண்டித்து தஞ்சை மத்திய மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளரும், திருவையாறு எம்.எல்.ஏ.வுமான துரை.சந்திரசேகரன் தலைமை வகித்து கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் தஞ்சை எம்.பி. ச.முரசொலி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., தஞ்சை மாநகர செயலாளரும், மாநகராட்சி மேயருமான சண்.இராமநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், து.செல்வம், கே.டீ.மகேஷ் கிருஷ்ணசாமி, மாவட்ட அவைத்தலைவர் இறைவன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஜித்து, மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர் காரல் மார்க்ஸ், மாநில மருத்துவ அணி துணை அமைப்பாளரும், துணை மேயருமான அஞ்சுகம் பூபதி, மாவட்ட பொருளாளர் எல்.ஜி.அண்ணா, மாவட்ட ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம் சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க அரசைக் கண்டித்து கும்பகோணம் மாநகரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தலைமை செயற்குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் முன்னிலை வகித்தனர். கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன் வரவேற்பு கூறி கண்டன கோசம் எழுப்பினார். இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் க.நஜிர் முகம்மது, கோவி. அய்யாராசு, எஸ்.துரைமுருகன், என்.ஜெயலெட்சுமி ஜெ.நடராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் எஸ்.கே.முத்துசெல்வம், மாநில நிர்வாகிகள் மு.உத்திராபதி, இராம.விஜயன் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.